**சுருக்கம்**

மறைமலைநகர் நகராட்சி - தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் அளிக்கும் கடனுதவி மூலம் மறைமலைநகர் நகராட்சிக்குட்பட்ட அண்ணா சாலையில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட சிமெண்ட் சாலை - ரூ 542.00 இலட்ச மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3)துறை

அரசாணை (நிலை) எண். 63 நாள் : 16.04.2008

படிக்க:

1. அரசாணை (ப) எண்.37,நநி(ம)குவ நாள் 30.01.2008
2. மறைமலை நகர் நகராட்சி செயல் அலுவலர் (பொ) கடித எண்.995/2001 / ஏ1 நாள் 18.02.2008
3. நகராட்சி நிர்வாக ஆணையாளரின் கடித எண்.7522/2008/ பி3 நாள் 26.02.2008

---

**ஆணை :**

மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மறைமலை நகர் நகராட்சிக்குட்பட்ட அண்ணா சாலையில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட சிமெண்ட் சாலையை ரூ.542.00 இலட்ச மதிப்பீட்டில், அமைக்கும் திட்டம் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகம் அளிக்கும் கடன் உதவி மூலம் மேற்கொள்ள நிர்வாக அனுமதி கோரியுள்ள மறைமலைநகர் நகராட்சி செயல் அலுவலரின் (பொ) செயற்குறிப்பினை, அரசின் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் மேலனுப்பியுள்ளார். இதுகுறித்து மறைமலை நகர் நகராட்சி 31.12.2007 நாளிட்ட தீர்மான எண்.227/2007-ல் 10% நகராட்சி நிதியிலும் 90% நிறுவன கடன் தொகை மூலம் இத்திட்டம் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

2) நகராட்சி நிர்வாக ஆணையர் மேலனுப்பியுள்ள செயற்குறிப்பினை அரசு நன்கு பரிசீலித்து, அதனை ஏற்று மறைமலை நகர் நகராட்சிக்குட்பட்ட அண்ணாசாலையில் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட சிமெண்ட் சாலையை ரூ.542.00 இலட்ச மதிப்பீட்டில், தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உள்கட்டமைப்பு வளர்ச்சிக் கழகத்தின் கடனுதவி மூலம் அமைக்க, நிர்வாக அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

கே.தீனபந்து,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5

2..

செயல் அலுவலர் (பொ), மறைமலை நகர் நகராட்சி, காஞ்சிபுரம் மாவட்டம், (நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக)
மாநில கணக்காயர், சென்னை – 9/18/35.
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை –108

<u>நகல்</u>

நிதித்துறை, சென்னை –9.
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2/பொதுத்துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / <u>உதிரி நகல்</u>

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.